ஊக்குவிப்பு (ம) வர்த்தகத் துறை
தபால்
E-3241896
28 5
சென்னை–600 009.
தலைமைச் செயலகம்

**சுருக்கம்**

தொழில் – சிப்காட் – நில எடுப்பு – செங்கல்பட்டு மாவட்டம் – மதுராந்தகம் வட்டம் – சூரை, சித்தாலமங்கலம் மற்றும் புழுதிவாக்கம் கிராமங்கள் – 51.21.5 ஹெக்டேர் (126.50 ஏக்கர்) பட்டா நிலங்கள் நில எடுப்பு – 0.64.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்கள் நில உரிமை மாற்றம் – சிப்காட் தொழிற்பூங்கா – தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–ன் கீழ் (அல்லது) தனிநபர் நேரடி பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்துதல் – நில எடுப்புக்கான பணியிடங்கள் ஏற்படுத்துதல் – நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (சிப்காட்–நி.எ)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.197**

**நாள்: 22.9.2022**
**சுபகிருது வருடம், புரட்டாசி 5,**
**திருவள்ளுவர் ஆண்டு – 2053**

**படிக்க:**

1) சிப்காட் மேலாண்மை இயக்குநரின் கடித ந.க.எண்.நி.எ/சூரை/PN/2021, நாள் 25.10.2021.

2) செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கடித எண்.ந.க.14332/2021/B1, நாள் 27.12.2021.

3) நில நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.எஸ்2/1647137/2021, நாள் 31.1.2022.

******

**ஆணை:**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சித்தாலமங்கலம் கிராம புல எண்கள் 60/1 மற்றும் பல, சூரை கிராம புல எண்கள் 123/1A மற்றும் பல, புழுதிவாக்கம் கிராம புல எண்கள் 301/5A மற்றும் பலவற்றில் 51.21.5 ஹெக்டேர் (126.50 ஏக்கர்) தனியார் நிலம் மற்றும் 2.03.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளடக்கிய மொத்தம் 53.24.5 ஹெக்டேர் பரப்பளவில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம் 1997–ன் கீழ் நில எடுப்பு/நில உரிமை மாற்றம் செய்ய நிர்வாக அனுமதி வழங்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார். அதன்படி, நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலங்களின் விவரம் : –

| வ. எண். | கிராமம் | பட்டா நிலம் பரப்பு (ஹெக்டேரில்) | அரசு புறம்போக்கு நிலம் (ஹெக்டேரில்) | மொத்தம் (ஹெக்டேரில்) |
|---|---|---|---|---|
| 1. | சூரை | 9.58.5 | 0.64.0 | 10.22.5 |
| 2. | புழுதிவாக்கம் | 15.35.0 | --- | 15.35.0 |
| 3. | சித்தாலமங்கலம் | 26.28.0 | --- | 26.28.0 |
| | | 51.21.5 | 0.64.0 | 51.85.5 |

2. மேற்காணும் புலங்கள் 15.12.2021 அன்று மாவட்ட வருவாய் அலுவலரால் புலத்தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள மாவட்ட ஆட்சியர், நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தனி வட்டாட்சியர் (நி.எ) தலைமையில் கீழ்க்காணும் ஒரு அலகு தற்காலிக பணியிடம் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்து அரசாணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ.எண். | பதவி பெயர் | எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | தனி வட்டாட்சியர் (நி.எ) | 1 | 37700-138500 |
| 2. | உதவியாளர் | 1 | 20600-75900 |
| 3. | உதவியாளர் நிலை வருவாய் ஆய்வாளர் | 1 | 20600-75900 |
| 4. | சார் ஆய்வாளர் | 2 | 35400-130400 |
| 5. | தட்டச்சர் / கணினி இயக்குபவர் | 1 | 19500-71900 |
| 6. | அலுவலக உதவியாளர் | 1 | 15700-58100 |
| 7. | புல உதவியாளர் | 2 | 15700-58100 |
| | மொத்தம் | 9 | |

3. மேற்காணும் நில எடுப்பு பணிகளுக்காகவும், பணியமைப்பு சார்ந்த செலவினங்களுக்காகவும், உத்தேச கேட்புத் தொகையானது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளதென மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்: -

| வ. எண். | கிராமம் | பட்டா நிலம் பரப்பு (ஹெக்டேரில்) | உத்தேச நில மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | சூரை | 9.58.50 | 4,10,17,485/- |
| 2. | புழுதிவாக்கம் | 15.35.00 | 3,95,84,008/- |
| 3. | சித்தாலமங்கலம் | 26.28.00 | 24,97,43,186/- |
| | மொத்தம் | 51.21.50 | 33,03,44,679/- |
| 4. | புதிய நில எடுப்புச் சட்டம் 2013-ன்படி நில மதிப்பு (2.5 மடங்கு) | | 82,58,61,698/- |
| 5 | 14.5% பணியமைப்பு செலவினம் | | 11,97,49,946/- |
| | ஆக மொத்தம் | | 94,56,11,644/- |

4 பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று, செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சூரை, சித்தாலமங்கலம் மற்றும் புழுதிவாக்கம் ஆகிய கிராமங்களில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க, தனியார் பட்டா நிலங்கள் 51.21.5 ஹெக்டேர் (126.50 ஏக்கர்) நில எடுப்பு செய்யவும், 0.64.0 ஹெக்டேர் நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம் 1997-ன் கீழ் அல்லது தனிநபர் நேரடி பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்ய (1) நிர்வாக அனுமதி வழங்குமாறும் (2) இந்நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள 9 பணியாளர்களை கொண்ட ஒரு அலகினை உருவாக்கவும் மற்றும் (3) நில எடுப்பு மற்றும் பணியமைப்பு

செலவினங்களுக்கான மொத்த தொகையாக ரூ.94,56,11,644/- ஒப்பளிப்பு செய்தும் உரிய ஆணைகள் வழங்குமாறு நில நிர்வாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் கோரிக்கை மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சித்தாலமங்கலம் கிராம புல எண்கள் 60/1 மற்றும் பல, சூரை கிராம புல எண்கள் 123/1A மற்றும் பல, புழுதிவாக்கம் கிராம புல எண்கள் 301/5A மற்றும் பலவற்றில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க 51.21.5 ஹெக்டேர் (126.50 ஏக்கர்) தனியார் பட்டா நிலங்கள் மற்றும் 0.64.0 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்கள் முறையே நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்ய தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997-ன் கீழ்/2013-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம் 2013 (RFCTLARR Act, 2013) கீழ் அல்லது தனிநபர் நேரடி பேச்சுவார்த்தை மூலம் நிலஎடுப்பு செய்ய நிர்வாக அனுமதியும், இந்நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள 9 பணியாளர்கள் கொண்ட ஒரு அலகினை (மேலே பத்தி-2-ல் விவரித்துள்ளவாறு) தற்காலிகமாக ஒரு வருட காலத்திற்கு தோற்றுவிக்கவும் நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. நில எடுப்பு மற்றும் பணியமைப்பு செலவினங்களுக்கான (தோராயமாக) மொத்த தொகையாக ரூ.94,56,11,644/- (ரூபாய் தொன்னூற்று நான்கு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து பதினோறு ஆயிரத்து அறுநூற்று நாற்பத்தி நான்கு மட்டும்)-ஐ (உத்தேச நில மதிப்பு ரூ.82,58,61,698/- + நிருவாகச் செலவினங்கள் ரூ.11,97,49,946/-) சிப்காட் நிறுவனம் நிதி ஒப்பளிப்பு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்படுகிறார் :

(i) நிலமதிப்பு கணக்கீடு செய்யப்படும்பொழுது அரசாணை (நிலை) எண்.29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24.01.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.411, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 06.08.2020-இல் உள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

(ii) அரசு புறம்போக்கு நிலங்களை சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்குரிய உரிய முன்மொழிவினை நில நிர்வாக ஆணையர் வழியாக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(iii) அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் நில எடுப்புப் பணிகளை முடிக்க வேண்டும்.

(iv) தற்காலிக பணியிடங்கள் தோற்றுவித்த பின்னர் நடைமுறையிலுள்ள உரிய விதிகளின் அடிப்படையில் அப்பணிநியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 5-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் (நில எடுப்பு) ஊதிய செலவினம் மற்றும் நிருவாகச் செலவினமாக செப்டம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை ரூ.18,41,556/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று ஐம்பத்தாறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேலும், 2023-2024-ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தொகையை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்ப்பதற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தோராயமாக நிர்ணயிக்கும் நிலமதிப்பினை சிப்காட் நிறுவனத்தால் கீழ்காணும் கணக்கு தலைப்பில் வைப்பீடு (Deposit) செய்யப்பட வேண்டும்:-

"K- வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் - 8443-00 உரிமையியல் வைப்பீடுகள் - 101 வருவாய் வைப்பீடுகள் - AA வருவாய் வைப்பீடுகள் - 801 - வரவுகள் - 02 - வட்டி பெறா வைப்பீடுகள்

(ததொகு 8443-00-101- AA- 801 02) (வரவுகள்)"

9. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய தொகையை, சிப்காட் நிறுவனத்திடமிருந்து பெற்று கீழ்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்:-

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் 60 - ஏனைய பணிகள் - 800 ஏனைய வரவுகள் CH தனியார், பொதுத் துறைகளுக்காகச் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் மத்திய அரசு தொடர்பான திட்டப் பணிக்காக செய்த நிருவாகப் பணி குறித்த பணியாளரமைப்புச் செலவை ஈடு செய்தல் - 227 - வரி அல்லாத கட்டணங்கள் 99 - ஏனையவைகள்

(ததொகு 0070-60-800-CH 227 99) "

10. நிலம் கையகப்படுத்துதல் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2053-00 - மாவட்ட நிருவாகம் - 094 ஏனைய பணியாளரமைப்பு - மாநில செலவினங்கள் - AN தொழில் வளர்ச்சி மையங்களுக்காக சிப்காட் நிறுவனத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான பணியாளரமைப்பு

(ரூபாயில்)

| | |
|---|---|
| 301 சம்பளங்கள் 01 அடிப்படை சம்பளம்<br>(ததொகு 2053-00-094-AN- 301 01) | 11,76,280/- |
| 301 சம்பளங்கள் 02 மருத்துவப்படி<br>(ததொகு 2053-00-094-AN-301 02) | 14,700/- |
| 301 சம்பளங்கள் 06 வீட்டு வாடகைப்படி<br>(ததொகு 2053-00-094-AN-301 06) | 57,400/- |
| 303 அகவிலைப்படி 01 அகவிலைப்படி<br>(ததொகு 2053-00-094-AN-303 01) | 3,93,176/- |
| 305 அலுவலகச் செலவுகள்-02 ஏனைய சில்லறை செலவுகள்<br>(ததொகு 2053-00-094-AN-305 02) | 50,000/- |
| 301 சம்பளங்கள்-07 பயணச் சலுகை<br>(ததொகு 2053-00-094-AN-301 07) | 1,50,000/- |

11. இத்திட்டத்திற்கான நில எடுப்பு பணி முடிவடைந்த பின் செலவுகள் அனைத்தும் உரிய கணக்கு தலைப்பிற்கு, உரிய முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும். மேலும், இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் செலவினை கவனித்து அவற்றினை உரிய அரசு கணக்குத் தலைப்பில் வைப்பு செய்வதை கண்காணிக்கும்படியும் நில நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

12. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.18,41,556/- 2022-2023-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும், அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள நில நிருவாக ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (தொழில்/வருவாய்/வ.செ.பொ-1) துறைக்கு அனுப்புமாறு நில நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13. இவ்வாணையானது நிதித்துறை அ.சா.கு.எண்.41445/நிதி(தொழில்)/ 2022, நாள் 20.9.2022-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1265 (ஆயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து) (IFHRMS ASL No.2022091265) PSL 202209 PSL 0293.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்:</u>

நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.

மேலாண்மை இயக்குநர்,
சிப்காட், 19-A, ருக்மணி லஷ்மிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம்.

மாவட்ட வருவாய் அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம்.

முதன்மை பொது கணக்காயர் (சி.ஏ), சென்னை – 600 018.

முதன்மை கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.

மாவட்ட கருவூல அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம்.

துணை கருவூல அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம்.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நி.நி.2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (அ.ந.மு. II/ஜிஜஎம்)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

நிதி (வ.செ.பொ.-I/II/வ.வ. I/ வருவாய்/ஊதிய பிரிவு/மை.ம.ஆ.பி/தொழில்)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோப்பு/உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

ஜெயவள்ளி
22.9.2022
**பிரிவு அலுவலர்**

22/9/2022